**நுவரெலியா மாநகர சபை**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 19 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நுவரெலியா மாநகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | புதிய எல்லை நிர்ணயத்தின் கரரணமாக சபையின அதிகாரப் பிரதேசத்திலிருந்து வெளியாகிய சொத்துக்களுடன் தொடர்பான வீத வரி வாடகை சிட்டைப்படுத்தல் மற்றும் வீத வரி நிலுவையினை இனங்கண்டு கணக்குகளில் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் சீர் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது . |
| (ii) | சபையினால் நுவரெலியா மக்கள் வங்கியில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சேகரித்தல் கணக்கில் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று காணப்பட்ட ரூபா. 1,684,569 மீதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் சீர் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது . |
| (iii) | மீளாய்வாண்டுடன் தொடர்பான காணி வரி வருமானம் ரூபா. 3,855,516 ஆக இருந்த போதும் அது ரூபா. 6,435,613 என கணக்கிடப்பட்டிருந்தமையினால் | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை | எதிர்காலத்தில் சீர் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| | மீளாய்வாண்டின் வருமானம் ரூபா. 2,580,097 இனால் கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எடுத்தல். |
| (iv) | மீளாய்வாண்டினுள் வட் வரி செலுத்துகையில் அனுமதிக்கத்தக்க உள்ளீட்டு வரி ரூபா. 4,533,856 குறித்த செலவுத் தலைப்பிற்கு வரவிடப்பட வேண்டியிருந்த போதும் வரவுத் தலைப்பொன்றில் வரவிடப்பட்டிருந்தமை | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் சீர் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 06 கணக்கு மீதிகளின் பெறுமதி அக் கணக்கு மீதிகளுடன் தொடர்பான பயன்பாட்டுப் பேரேடுகளின் மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா. 1,714,676 வித்தியாசம் காணப்பட்டது. | மீதிகளின் வித்தியாசத்தை ஒப்பிட்டு சீர் செய்தல். | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும் |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு |
|---|
| நிர்மாண கடன்பட்டோர் ரூபா 128,428,098 ஐ பதிவழிப்பதற்கு அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

**1.4 பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று 02 தொடக்கம் 04 | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான | எதிர்காலத்தில் சீர்செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| வருடங்களைக் கடந்த ரூபா. 4,518,252 பெற வேண்டிய மீதிகளை அறவிடாமை. | நடவடிக்கை எடுத்தல் |

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று 01 வருடத்தைத் தாண்டியிருந்த ரூபா. 20,894,764 பெறுமதியான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்க்காமை. | செலுத்த வண்டிய மீதிகளை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏதிர்காலத்தில் சீர்செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. |

**1.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபை அதிகாரச் சட்டத்தின் 187 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி சபையினால் ரூபா. 40,783,333 தொகை சட்டத்தின் 187 ஆம் பிரிவிற்கு முறனாக தனியார் வங்கியொன்றில் நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. | கட்டளை சட்டத்தின் விதிமுறை களுக்கேற்ப செயற்படல். | எதிர்காலத்தில் சீர்செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்ட | சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு 2019 ஏப்ரல் வரையிலும் மத்திய சுற்றாடல் அதிகார சபையிட மிருந்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | குறித்த கட்டளைகளுக்கு அமைய செயற்படல். | எதிர்காலத்தில் சீர்செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2008 இன் 01 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (பாதுகாப்பு மற்றும் தரம்) கட்டளைகள் | | | |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XXIV ஆம் பிரிவின் 1.6 மற்றும் 4 சட்டங்கள். | சபையில் தற்காலிகமாகச் சேவையாற்றி இடமாற்றம் பெற்ற, ஓய்வு பெற்ற மற்றும் மரணமடைந்த, சேவை இடை நிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையிலிருந்து இடை விலகிய 68 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர் களிடமிருந்து ஒரு வருடத்திற்கும் மேலாக அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மற்றும் முற்பணம் ரூபா. 1,512,934 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் விதி முறைகளுக்கமைய கடன் மற்றும் முற்பணத்தினை அறவிடல். | எதிர்காலத்தில் சீர்செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக் கோவை 371(2). 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03/2015 இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 14 சந்தர்ப்பங்களில் பல்வேறு செயற்பாடுகளுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா. 1,641,945 கட்டு நிதி 06 தொடக்கம் 58 மாதங்கள் கடந்திருந்த போதும் மீளச் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | செயல்நிமித்த கட்டு நிதிபிரமாணம் மற்றம் நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தீர்வுசெய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |
| | | 09 சந்தர்ப்பங்களில் பதவிநிலை அல்லாத அதிகாரிகளுக்கு ரூபா. 437,750 பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | குறித்த கட்டளைகளுக்கமைய செயற்படல் | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயல்நிமித்த கட்டு நிதியாக ஒரு சந்தர்ப்பத்தில் வழங்க முடியுமான கூடிய தொகை ரூபா. 100,000 ஆக இருந்த போதும் 02 சந்தர்ப்பங்களில் ரூபா. 596,500 பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | குறித்த எல்லைகளின் அடிப்படையில் கட்டு நிதி பெற்றுக் கொடுத்தல் | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |
| (ஈ) | இலங்கை சனநாயக் சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 189 மற்றும் 486 | 2014-2017 இடைப்பட்ட காலப்பகுதியில் 07 சந்தர்ப்பங்களில் சபைக்கு வருமானமாக கிடைத்து ரூபா 178,916 பெறுமதியான மதிப்பிழந்த காசோலை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து காசோலைகளின் பெறுமதி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |
| (உ) | நிதிப் பிரமாணம் 570 (3) | வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகள் முதல் 11 ஆண்டுகள் வரையான காலத்தை விஞ்சிய ரூபா 8,738,452 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |
| (ஊ) | 2016.12.29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 42 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய காலப்பகுதியில் எரிபொருள் எரிவு பரட்சிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 118,906,103 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 107,228,622 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 99,068,258 | 86,939,615 | 84,830,288 | 94,065,436 | 82,248,792 | 86,961,780 | 82,637,247 | 93,255,272 |
| வாடகை | 91,634,275 | 55,030,277 | 53,153,903 | 43,300,208 | 83,038,586 | 48,619,605 | 47,505,781 | 40,637,959 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 23,572,000 | 20,787,120 | 19,900,958 | 1,421,860 | 22,712,000 | 22,350,622 | 22,204,028 | 1,424,360 |
| ஏனைய வருமானம் | 169,848,000 | 126,584,810 | 134,978,554 | 40,306,647 | 157,353,000 | 157,989,575 | 144,979,163 | 194,695,830 |
| | 384,122,533 | 289,341,822 | 292,863,703 | 179,094,151 | 345,352,378 | 315,921,582 | 297,326,219 | 330,013,421 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 63,667,302 ஆன நிலுவை வருமானத்தில் ஆண்டில் ரூபா 18,560,026 தொகை அதாவது 29% ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் தண்டப்பணமும் மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 42,102,008 ஆக இருந்ததுடன் அறவீடுகள் ரூபா 27,948,458 அதாவது 66% ஆக இருந்தது. மாத்திரம் ரூபா 330,013,421 ஆகவிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான | மாநகர சபை மற்றம் ஏனைய சட்டங்களின் பரிகாரம் நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 978,326 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 38,088,328 தொகையும் காணப்பட்டன. | நீதிமன்ற தண்டப்பணத்தினை சபைக்கு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபை அதிகாரச்சட்டத்தின் 267(1) ஆம் பிரிவிற்கமைவாக உப விதிகள் விதிக்கப்பட்டு சபைக்கு பொறுப்புச் சாட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை முன்னிலைப்படுத்துவதற்கும் வருமானம் ஈட்டுவதற்கும் முடியுமாக இருந்த போதும் கிரெகரி குளப் பூங்காவில் உல்லாச வரி நடவடிக்கைகள், வசந்த விழாக் காலத்தில் கழியாட்டங்களை நடாத்தல், பிரச்சார நடவடிக்கைகள், குதிரைகள் கோவேறு கழுதைகள் போன்ற விலங்குகளை வினோதச் செயற்பாடுகளுக்காகப் | சபைக்கு வருமானம் ஈட்டத்தக்க சந்தர்ப்பங்களை இனங்கண்டு உப விதிகளை அமைத்து வருமானத்தை ஈட்டல். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தல், மோட்டார் வாகனங்கள் நிறுத்தி வைக்கும் இடங்களை தீர்மானித்தல் ஆகியவை தொடர்பாக உப விதிகளை விதித்து முறையாக வருமானம் ஈட்டல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை . | | |
| (ஆ) | மாநகர கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் கீழ் காணப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பாக உப வதிகள் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்காமை காரணமாக நகரின் முறையற்ற நிர்வாகத்திற்கு தாக்கம் ஏற்படல், நல்லாளுகை வெளிப்படை தன்மை தொடர்பான சிக்கல்கள் பொது மக்கள் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு வழங்கும் போது சட்டரீதியான தடைகள் ஏற்படல் போன்ற பாதகமா நிலைமை உருவாகியிருந்தது. | மாநகர கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உப விதிகளை பிறப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

-----------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக நகர சபை போதியளவில் அறிந்திருக்காதிருந்ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |

### (இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபையினால் கழிவுப் பொருட்கள் அகற்றிப் போடப்படுகின்ற ஆனபல்லம காணியை பிரதேச சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உக்கும் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்யும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | காணியைக் கைப்பற்றி சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்குச் சொந்தமான காணியில் ஒரு பகுதியை வழங்குவதற்கு இணங்கியிருந்தமையால் கழிவுப் பொருள் தளத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர் காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்கு மின்வேலியொன்றும், காணியைச் சுற்றி வடிகாண்களையும் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (ii) | நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற வணிகப் பெறுமதியுடைய கழிவுப் பொருட்களை பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கும், களஞ்சியப்படுத்துவதற்கும் மற்றும் விற்பனை செய்வதற்கும் முறையான திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | வணிகப் பெறுமதியுள்ள கழிவுப் பொருட்களை பதிவேடுகளுக்கு க் கொண்டு வருவதற்கும் விற்பனை செய்வதற்கும் முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கழிவுப் பொருள் தளம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் கழிவுப் பொருட்களை வேறுபடுத்திக் கொள்வதற்கும் அதன் பின்னர் பதிவேடுகளுக்குக் கொண்டுவருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான உடபுஸ்ஸல்லாவ வீதி கடைத்தொகுதியின் 16 கடைகள் 2016 முதல் 30 ஆண்டுகளுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகையாளருடன் உடன்டிக்கை | குறிதத் குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சபை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை பெற்றக்கொள்ள நடவடிக்கை | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திடவில்லை. உரிய குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட மாத வாடகையை கொடுப்பனவு செய்ய குத்தகையாளர்கள் இணங்கிய போதும் 2016 யூன் 23 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட மாத வாடகை மீளாய்வர்டி அறவிடப்படாமையால் 2014 யூலை முதல் 2018 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,680,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | எடுகக்ப்ட். வேண்டும். | |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5 உப பிரிவின் பிரகாரம் படடியலிடப்பட்ட வீடுகளைப் பெற்றக்கொள்வதற்காக சபையில் சேவை புரியும் உத்தியோகத்தரொவரிடமிருந்தும் சபையில் சேவை புரிந்து இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தரடமிருந்தும்2016 முதல் 2018 திசெம்பர் காலப்பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 223,761 அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்குச் சொந்தமான பம்பரகலேஅமைந்துள்ள ஏக்கரொன்றில் கற்குகை 2008 திசெம்பர் 02 ஆந் திகதி முதல் 2013 திசெம்பர் 01 வரையான காலப்பகுதிக்கு நபரொருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை காலபப்குதி முடிவடைந்து 5 ஆண்டுகள் கடந்த போதும் உடன்படிக்கையை புதுப்பிக்கவோ அல்லது மீண்டும் சபைக்கு கையேற்கவோ நடவடிக்கை எடுக்கப்ப்டிருக்கவில்லை. குத்தகைக்கு எடுத்த நபரால் முன்னைய நிபந்தனைகளை மீறி குறித்த காணியில் நிரந்தர கட்டிடமொனறையும் மேற்கொண்டு வியாபாரநடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லப்பட்டு வருகின்றது. | மீண்டும் சபைக்கு கையேற்கவோ அல்லது புதுப்பித்து கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | 22 வாகன மற்றும் சுகாதார தொழிலாளர்கள் உரிய பதவிகளின் கடமைகளுக்குப் புறம்பான கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பதவிகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். | முன்பள்ளி பாடசாலை, நூலகம், சுடலைக்கூடம், மாநாட்டு மண்டபம், பொது மலசல கூடம் மற்றும் இணைந்த நிறுவனங்களில் பாதுகாப்பு சேவைக்காக போதியளவான ஊழியர் தரப்பொன்று காணப்படாமையினாலும் இரண்டு வருமானப் பரிசோதகர்கள் காணப்படாமையினாலும் வருமானத்தைச் சேகரிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (உ) | ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 03 வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அகற்றப்பட வேண்டிய வாகனத்தை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண இயந்திரப் பணிப்பாளரால் விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய 03 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மிகுதி |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஊ) | 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க வர்த்தமானியில் கழிவுப் பொருள் அகற்றும் உபவிதிகளைப் பின்பற்றி கழிவுகளை அகற்றுவதற்காக வரி அறவிடுவதற்கு பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறையான பிரகாரம் கழிவுப் பொருள் தளம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் கழிவுப் பொருள் வரி அறவிடப்படும். |
| (எ) | மீளாய்வாண்டிற்காக சபை அதிகாரப்பிரதேசத்தில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களினால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த நிலையான விளம்பர அறிவித்தல் பதாதை தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்படவில்லை. | நிரந்தர விளம்பர அறிவித்தல் பதாதை தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக நிலையான விளம்பர அறிவித்தல் பதாதை தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்பட்டுள்ளது. |
| (ஏ) | சபை அதிகாரப்பிரசேத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 126 தொழில் முயற்சிகள் மற்றும் செல்லுபடிக் காலத்தைக் கடந்திருந்த 28 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் ரூபா 616,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய தொழில் முயற்சிகளை இனங்கண்டு அனுமதிப்பத்திரம் விநியோகிக்க வேண்டும். | இது தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளுமாறு விடய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் அது பூர்த்தி செய்யப்பட்டதும் உடனடியாக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஐ) | மீளாய்வாண்டிற்காக சபை அதிகாரப்பிரதேசத்தில் வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரி செலுத்த வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படவில்லை. | வருடாந்தம் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் சபையின் 34 பதவிகளுக்குரிய 150 வெற்றிடங்களும் காணப்பட்டன. | கொள்வதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும |
| (ஆ) | தொழிலாளர் பதவிகளில் காணப்படும் 60 வெற்றிடங்களனி எண்ணிக்கை 60 ஆக இருந்த போதிலும் அமைய/ சமயா சமய ஊழியர்களை ஈடுதி ரூபா 37,726,972 சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உச்ச அளவில் மனித வளங்களை கையாள வேண்டும் . | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும |

## 3.4.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017.12.08 ஆந் திகதிய 2049 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி மூலம் 2018 ஆம் ஆண்டிற்காக ஒவ்வொரு திரைப்படக் கர்சிக்காக நுழைவுச் சீட்டின் 25% ஆன களியாட்ட வரி அறவடப்படுவதாக வெளியிடப்பட்டிருந்த போதிலும் நுழைவுச் சீட்டுக்களில் 10 சதவீதம் ஆன வரியொன்று அறவிடப்படுவதால் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,425,308 ஆன வீதவரி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் களியாட்ட அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்திே வீதவரி ஆதனங்களில் 2007 ஆட ஆண்டின் பின்னர் மதிப்பீ( | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 06 வாகனங்கள் ஓரா்ணடு முதல் 05 ஆண்டுககள் வரையானகாலவீச்சில் விளைவற்றக் காணப்பட்டது. | திருத்தம் செய்வோ அல்லது பொருத்தமான வகையில் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் |